# திராவிடத்தால் வாழ்கிறோம்

1200

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

**குமரன்தாஸ்**

61

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# ‘மக்கள் ஆணையிட்டால்’ இருளை விரட்டும் கதிரவன்!

*1988*-ஆம் ஆண்டு கலைஞரின் திரைக்கதை வசனத்தில், வெளிவந்த படம் ‘மக்கள் ஆணையிட்டால்.’

தேனாண்டாள் பிலிம்ஸ் தயாரிப்பில், இராம.நாராயணன் இயக்கத்தில் வெளிவந்த திரைப்படமாகும். பாடல்களைக் கலைஞர் எழுத, எஸ்.ஏ.ராஜ்குமார் இசையமைத்த படம். விஜயகாந்த், நிழல்கள் ரவி, ரேகா, செந்தாமரை, எஸ்.எஸ்.சந்திரன், டெல்லி கணேஷ், குண்டு கல்யாணம் ஆகியோர் நடித்திருந்தனர்.

இந்தத் திரைப்படமும் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கால அவலங்களைப் பேசிய திரைப்படமாகும். அதிகாரத்தில் உள்ள ஓர் அமைச்சர் காவல்துறை உதவியோடு புரியும் கொடுமைகளை எதிர்த்து, ஓர் எளிய டாக்ஸி டிரைவர் நீதியை நிலைநாட்டப் போராடுவதே இப்படத்தின் மையக் கருவாகும்.

### படத்தின் கதை

அமைச்சர் வைரவன் (செந்தாமரை) லஞ்சம், ஊழல் மூலம் சேர்த்த பணத்தையும் சொத்துகளையும் தனது பினாமியான பெருமாள்சாமி (டெல்லி கணேஷ்) பெயரில் சேர்த்து வைக்கிறார்.

பெருமாள்சாமியும் அமைச்சரின் செகரட்டரி சொக்குவும் (எஸ்.எஸ்.சந்திரன்) அமைச்சரின் அனைத்துத் தில்லுமுல்லு நடவடிக்கைகளுக்கும் உதவியாக இருக்கிறார்கள். ஏழைப் பெண்ணொருத்திக்கு அமைச்சர் வைரவன் உதவி செய்வதாக நடித்து, தனது காரில் வைத்து பாலியல் பலாத்காரம் செய்வதுடன், அவள் மீது காரை விட்டு ஏற்றிக் கொல்லவும் செய்கிறார்.

மேலும், இக்கொலை பேசுபொருளாக மாறியவுடன், அதனை மறைக்க ஏழைகளின் குடிசைகளுக்கு, மந்திரியின் ஆட்கள் நெருப்பும் வைக்கிறார்கள். இந்தப் பாதகச் செயல்களுக்கும் பெருமாள்சாமியும் சொக்குவும் உதவியாக இருக்கிறார்கள்.

அமைச்சரின் இந்தக் கொடுமைகளை, டாக்ஸி டிரைவர் கதிரவன் (விஜயகாந்த்) எதிர்த்துப் போராடுகிறான். ஏழை மக்களது எரிக்கப்பட்ட குடிசைகளை உடனடியாகக் கட்டித் தர வேண்டும் என துப்பாக்கி முனையில் அமைச்சர் வைரவனை மிரட்டிப் பணிய வைத்து, குடிசைகளை மீண்டும் கட்ட வைக்கிறான்.

இதனால், அமைச்சரின் கோபத்திற்கும் ஆளாகி பொய் வழக்கில் கைது செய்யப்படுகிறான். கதிரவனை, அவனது நண்பன் வழக்கறிஞர் மோகன் (நிழல்கள் ரவி) ஜாமீனில் எடுக்கிறான். இதுபோல் பலமுறை கதிரவனுக்கு உதவி செய்வதால், மோகனும் அமைச்சரின் பகையாளியாகிறான்.

மோகனின் மனைவி இறந்து விட்ட நிலையில், தனது இரண்டு குழந்தைகளை வளர்க்கச் சிரமப்படுகிறான். இதனைப் பார்க்கும் குழந்தைகளின் பள்ளி ஆசிரியை கமலா (ரேகா) மோகனைத் திருமணம் செய்து, இரு குழந்தைகளையும் வளர்க்கும் பொறுப்பினை ஏற்கிறாள்.



படங்கள் உதவி : ஞானம்

குழந்தைகளை கதிரவனிடம் ஒப்படைத்து விட்டு, இருவரும் வெளியூர் செல்கின்றனர். அப்போது அவர்கள் பயணம் செய்யும் காரின் பிரேக் வயரை அமைச்சரின் ஆட்கள் துண்டித்து விடுவதால், கார் விபத்திற்கு உள்ளாகி, மோகன் இறந்து போகிறான்.



குழந்தைகள் அப்பா எங்கே என்று கேட்பார்களே என்று, கமலா கலங்குகிறாள். ஊருக்குத் திரும்பும் வழியில் மோகனைப் போலவே தோற்றமுடைய திருடன் வரதனை கமலா சந்திக்கிறாள். அவனைக் குழந்தைகளின் தந்தையாக நடிக்க வேண்டி பணம் கொடுத்து அழைத்து வருகிறாள்.

ஆனால், குடிகாரனான வரதனால் பல்வேறு தொந்தரவுகளைச் சந்திக்கிறாள். அதே சமயம் தங்களால் கொல்லப்பட்ட மோகனுக்குப் பதிலாக வந்திருக்கும் நபர் வரதன் எனும் திருடன் என்பதை அமைச்சர் அறிந்துகொண்டு தனக்கு ஆதரவாகச் செயல்பட வேண்டும் என வரதனை மிரட்டுகிறார். வரதனும் சம்மதிக்கிறான்.

இதற்கிடையே, தனது ‘பினாமி’ பெருமாள் சாமி வெளிநாடு சென்றிருக்கும் சமயத்தில், பெருமாள்சாமியின் மனைவி அலமுவை சந்திக்கும் மந்திரி வைரவன் அவளை மிரட்டி பாலியல் வல்லுறவு கொள்வதால், அலமு கர்ப்பமடைகிறாள். இதனை அறியும் பெருமாள் சாமி, மந்திரியின் மீது கோபம் கொள்கிறார். அலமு தன்னைத்தானே எரித்துக்கொண்டு சாகிறாள். பெருமாள்சாமி மந்திரியைப் பழிவாங்க காத்திருக்கிறார்.

### இடைத்தேர்தல் சதிவலைகள்

இந்த நேரத்தில் இடைத்தேர்தல் வருகிறது. வைரவனை எதிர்த்து, கதிரவன் போட்டியிடுகிறான். அவனுக்கு ஆதரவாக கமலா பிரச்சாரம் செய்கிறாள். மக்கள் செல்வாக்கு கூடுகிறது. இதனால், கமலாவின் இரண்டு குழந்தைகளையும் கடத்தி அடைத்து வைத்து, தேர்தலில் இருந்து கதிரவன் வாபஸ் வாங்க வேண்டும் இல்லாவிட்டால், குழந்தைகளை வெடிவைத்துக் கொன்றுவிடுவேன் என மந்திரி மிரட்டுகிறார்.

கதிரவன் அமைச்சரின் அடியாட்களுடன் மோதி, குழந்தைகளை மீட்கப் போராடுகிறான். அதே நேரம் அமைச்சர் வைரவன் கூட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கும் கமலா மீது காரை ஏற்றிக் கொலை செய்கிறான். இதனைக் கண்டு கொதித்தெழும் மக்கள், வைரவனைத் துரத்தி வருகின்றனர்.

அப்போது வைரவனை சந்திக்கும் பெருமாள் சாமி, கதிரவனைக் கொல்வதற்காக வெடிகுண்டு மறைத்து வைக்கப்பட்ட டாக்ஸியில் வேண்டுமென்றே அமைச்சரை ஏற்றி அமர வைத்து, டாக்ஸியை ஓட்டி தப்பித்துச் செல்லுமாறு அனுப்பி வைக்கிறான். ஆனால், கதிரவனைக் கொல்வதற்காக காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்துச் சிதறி அமைச்சர் இறந்து போகிறார். பெருமாள்சாமி பழி தீர்ந்தது என நிம்மதியடைகிறார்.

கமலாவின் குழந்தைகளை, கதிரவன் எதிரிகளிடமிருந்து மீட்டுப் பாதுகாப்பதுடன் படம் நிறைவடைகிறது. இதுவே ‘மக்கள் ஆணையிட்டால்’ திரைப்படத்தின் கதையாகும்.

இத்திரைப்படத்தின் பல காட்சிகளில் விஜயகாந்த் கருப்பு சிவப்புச் சட்டையணிந்து வலம் வருகிறார். இடைத்தேர்தல் பற்றிய பிரச்சாரக் காட்சியில், மு.க.ஸ்டாலின் அவர்கள் கருப்பு சிவப்பு கொடி பிடித்து அணி வகுத்து வரும் தி.மு.க. இளைஞர் அணியின் பிரம்மாண்டப் பேரணியும் இடம் பெற்றுள்ளது. ‘ஆற அமரக் கொஞ்சம் யோசிச்சுப் பாரு’ என்று மு.க.ஸ்டாலின் பாடுவதான புகழ்பெற்ற பாடல் காட்சியும் மிக லாவகமாக இணைக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் கலைஞரின் ‘மக்கள் ஆணையிட்டால்’ திரைப்படம் 1988-இல் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய திரைப்படமாக இருந்திருக்கும் என்று தோன்றுகிறது.

> “இடைத்தேர்தல் பற்றிய பிரச்சாரக் காட்சியில், மு.க.ஸ்டாலின் அவர்கள் கருப்பு சிவப்பு கொடி பிடித்து அணி வகுத்து வரும் தி.மு.க. இளைஞர் அணியின் பிரம்மாண்டப் பேரணியும் இடம்பெற்றுள்ளது.”

**...காட்சி விரியும்**

---

## மாணவர் நலனும் மாநில உரிமையும்...

‘நீட்’ எனும் அநீதியான தேர்வு மோசடியானது என்பதற்கு, இந்த ஆண்டும் நீட் தேர்வின் வினாத்தாள் தேர்வுக்கு முன்னரே வெளியானது அம்பலமாகியுள்ளது. இதையடுத்து, மே 3 நடைபெற்ற தேர்வை ரத்து செய்து தேசிய தேர்வு முகமை அறிவித்ததுடன், மறுதேர்வு நடத்தவும் திட்டமிட்டுள்ளது. முறைகேடுகளில் ஈடுபட்ட 45-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தியா முழுவதும், மாணவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், கழகத் தலைவர் அவர்கள் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதம் பல கேள்விகளை முன்வைத்துள்ளது.

‘நீட்’ தேர்வில் உள்ள அமைப்புரீதியான குறைபாடுகள் மீண்டும் ஒருமுறை வெளிச்சத்துக்கு வந்துள்ளன. ஒவ்வொரு ஆண்டும், மோசடிகளுக்கு வழி வகுக்கும் இந்தத் தேர்வினை ரத்து செய்துவிட்டு, +2 மதிப்பெண்கள் அடிப்படையிலேயே மருத்துவ மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

திராவிடர் கழகத்தின் சார்பில், தமிழ்நாடு முழுவதும் நேற்று கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதுடன், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை வாயிலாகவும் ‘நீட்’ தேர்வினை முற்றாக ரத்து செய்ய வேண்டியது அவசர, அவசியமாகும்’ என வலியுறுத்தியுள்ளார்.

‘தான் சட்டமியற்றுவதற்குச் சற்றும் உரிமையில்லாத ஒன்றின் கீழ், ‘நீட்’ என்ற ஒரு தேர்வை உருவாக்கி, அதை நடத்த அதிகாரமும், தகுதியும் இல்லாத ‘தேசியத் தேர்வு முகமை’ என்றொரு நிறுவனத்தை உருவாக்கி, அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக ஒன்றிய அரசு செயல்படுகிறது என ஆசிரியரின் அறிக்கை கண்டனம் தெரிவித்துள்ளது.

தொடக்கம் முதலே ஏராளமான மோசடிகளுக்கு வழிவகுத்து, மருத்துவக் கட்டமைப்பையும், மாணவர்களின் எதிர்காலத்தையும் சிதைக்கும் ‘நீட்’ உள்ளிட்ட பொது நுழைவுத் தேர்வு, தகுதித் தேர்வுகளை முற்றாக ரத்து செய்ய வேண்டும் என்பதே மாணவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. மாணவர் நலன் சார்ந்தும், மாநில உரிமை சார்ந்தும் சிந்திக்கவும், செயல்படவும் திராவிட இயக்கங்களே என்றும் நிற்கும் என்பததையே ‘நீட்’ ரத்து போராட்டக் களமும் சொல்லும்.

---

## ஃப்ளாஷ்பேக்



### ‘முரசொலி’யில் வெளியான கவிதை!



ஏ.பி.முருகேசன்

2013-ஆம் ஆண்டு, எனது பிறந்த நாளை முன்னிட்டு, முத்தமிழறிஞர் கலைஞரிடம் வாழ்த்துப் பெற, நானும் என் துணைவியார் கோமதியும் கோபாலபுரம் சென்றிருந்தோம். தலைவரிடத்தில் கழக வளர்ச்சி நிதி அளித்து, ‘வேண்டும் - வேண்டும்’ என்கிற தலைப்பில், கவிதையும் எழுதி அளித்தேன். கவிதையை வாசித்த தலைவர், அண்ணன் சண்முகநாதன் அவர்களிடத்தில் கொடுத்து, ‘முரசொலி’யில் வெளியிடுமாறு கூறினார். தலைவரிடத்தில் இருந்த அந்த நிமிடங்கள் மறக்க முடியாத நினைவலைகள்.

**- ஏ.பி.முருகேசன், தலைமைக் கழகப் பேச்சாளர், அண்ணாண்டப்பட்டி, திருப்பத்தூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## கருவூலம்

### முன்னிலும் அதிகமாகப் பணிபுரியுங்கள்!

1962-ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில், காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்ட பேரறிஞர் அண்ணா தோல்வியைத் தழுவினார். அவரது தோல்வியால் உள்ளம் துவண்ட கழகத்தினருக்கு ஊக்கமூட்டும் வகையில் வெளிவந்தது அவரது அறிக்கை. ‘உள்ளம் உடைய இடம் கொடுக்கக்கூடாது, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு கழக காரியமாற்றப் புறப்படுங்கள். மூச்செறிவதை நிறுத்திக் கொண்டு, முன்னிலும் அதிக ஆர்வம் காட்டிப் பணி புரியுங்கள்” என்கிறது அவரது அறிக்கை.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900